# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண் 66/2017**

பெயர்: குமாரசாமி நாள்: 28.11.2022

வா.சா.1 – 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

வா.சா.1 – குமாரசாமி - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

வழக்கு சொத்தில் நடை பாதைதான் உள்ளது. ஆனால் பிரதிவாதிகள் வண்டித்தடம் வேண்டுமென்று கோருகிறார்கள். அதற்காகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் எனது நிலத்தில் நடந்து செல்வதற்கு எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. பிரதிவாதிகள் எப்போது வண்டித்தடம் வேண்டுமென்று கேட்டார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால், எப்போது எனக்கு சரியாக ஞாபகமில்லை. பிரதிவாதிகள் தடம் போடுவதற்று முயற்சி செய்தார்களா என்றால், இல்லை. வண்டித்தடம் கேட்டு பிரச்சனை செய்தார்கள், நானும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன், பிரதிவாதிகளும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள். நான் புகார் அளித்தற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. பிரதிவாதிகள் சொத்தை அனுபவிப்பதற்கு வேறு ஏதேனும் பிரச்சனை செய்தார்களா என்றால், இல்லை. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே 1ம் பிரதிவாதி ஒரு வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 38/2011 வழக்கிலும் நடை தடம்தான் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. வண்டித்தடம் கேட்டுதான் தாக்கல் செய்திருந்தார். நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கிலேயே பிரதிவாதிகளும் எதிர் கோருரிமை கோரி எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் வண்டித்தடம் கேட்கவில்லையென்று சொன்னால், சரியல்ல. வண்டித்தடம் அமைப்பதற்கு வாய்ப்பே இல்லை. பிரதிவாதிகள் 4 அடி வழித்தடம்தான் கேட்டுள்ளார்கள் என்று சொன்னால், சரியல்ல. எனது நிலத்தில் வழித்தடம் அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை. இன்றைய தேதியில் நடை தடம் உள்ளது என்று சொன்னால், வரப்பின்மீதுதான் உள்ளது. அதன்மீது வரலாம், போகலாம். அதேபோல் நிலத்தின் அடியில் குழாய் உள்ளதற்கு ஆட்சேபனை ஏதேனும் உள்ளதா என்றால்,

இல்லை. நான் வழக்குரையில் கூறியுள்ளதுபோல் பிரதிவாதிகள் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றாலும், வண்டித்தடம் கேட்கவில்லை என்று சொன்னாலும், சரியல்ல. நான் எனது நிலத்திற்கு வேலி அமைப்பதற்கு ஏற்பாடு செய்தேன் என்று சொன்னால், சரிதான். 4, 5 கற்கள் நடும்போது வண்டித்தடம் விட்டுவிட்டு வேலி போட்டுக்கொள்ளுங்கள் என்று பிரதிவாதிகள் தடுத்ததால் மேற்கொண்டு வேலி அமைக்க முடியவில்லை. பிரதிவாதிகள் நடந்து செல்வதை தடுப்பதற்காகத்தான் வேலி அமைத்தேன் என்று சொன்னால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லையென்று சொன்னால், சரியல்ல. வழக்கு பொய்யான சங்கதிகளுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதிகள் கோரியுள்ள எதிர் கோருரிமைபடி வழக்கு அனுமதிக்க வேண்டுமென்று சொன்னால், சரியல்ல.

**மறுவிசாரணை**

பிரதிவாதிகள் வரப்பின்மீது நடந்து செல்லதான் எனக்கு ஆட்சேபனை இல்லை. 67 செண்ட் நிலத்தில் உள்ள வரப்பில் மட்டுந்தான் போய் வரலாம். மற்ற சர்வே எண்களில் உள்ள வரப்பில் பிரதிவாதிகள் செல்ல எந்த உரிமையும் இல்லை.

**குறுக்கு விசாரணை**

நான் சொல்லக்கூடிய நடை தடம் சர்வே எண் 254/1C ல் வடபுறம் உள்ளது என்று சொன்னால், சரிதான்.

ஒப்பம் /குமாரசாமி

ஒப்பம்/ திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சங்ககிரி.